


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.04.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் பதிப்பகப் பிரிவின் சார்பில் மூன்றாம் கட்டமாக புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய 300 ஆன்மிக நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, சி.பழனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.4.2025) தலைமைச் செயலகத்தில், சென்னை மாகாண சட்டமன்றத்துக்கு நியமிக்கப்பட்ட முதலாவது உறுப்பினரும், சென்னை ஆதிதிராவிடர் மகாஜன சபையைச் சீரமைத்தவரும். ஆதிதிராவிட மக்களின் துயரங்களை முதன்முதலாக பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றவருமான எம்.சி. இராஜா அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த எம். புருஷோத்தமன், திருமதி பி. குமுதா, மோகன்ராஜ், திருமதி ருக்மணி மோகன்ராஜ், ஜெனிக்யஸ், அகஸ்டின், திருமதி கிரேசி, திருமதி மேரி கிளாரா உள்ளிட்ட குடும்பத்தினர் சந்தித்து, சென்னை, சைதாப்பேட்டை, எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் பத்து தளங்களுடன் கட்டப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி மாணவர்களுக்கான புதிய விடுதிக் கட்டடத்தை நேற்று திறந்து வைத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். இச்சந்திப்பின்போது, அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், க.லட்சுமி பிரியா, த. ஆனந்த், கே.எஸ். கந்தசாமி, எஸ். அண்ணாதுரை ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.4.2025) தலைமைச் செயலகத்தில், சென்னை மாகாண சட்டமன்றத்துக்கு நியமிக்கப்பட்ட முதலாவது உறுப்பினரும். சென்னை ஆதிதிராவிடர் மகாஜன சபையைச் சீரமைத்தவரும், ஆதிதிராவிட மக்களின் துயரங்களை முதன்முதலாக பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் சுவனத்திற்குக் கொண்டு சென்றவருமான எம்.சி. இராஜா அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த எம். புருஷோத்தமன், திருமதி பி. குமுதா. மோகன்ராஜ் திருமதி ருக்மணி போகன்ராஜ், ஜெனிக்லஸ், அகஸ்டின், திருமதி கிரேசி, திருமதி மேரி கிளாரா உள்ளிட்ட குடும்பத்தினர் சந்தித்து, சென்னை, சைதாப்பேட்டை எம்.சி. இராஜா கல்லூரி மாணவர் விடுதி வளாகத்தில் 44 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் பத்து தளங்களுடன் கட்டப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி மாணவர்களுக்கான புதிய விடுதிக் கட்டடத்னத நேற்று முன்தினம் திறந்து வைத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். இச்சந்திப்பின்போது, அமைச்சர் மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சு.லட்சுமி பிரியா, த. ஆனந்த் கே.எஸ். சந்தசாமி, எஸ். அண்ணாதுரை ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (16.4.2025) தலைமைச் செயலகத்தில், மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் அவர்கள் சந்தித்து பேசினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மக்கள் நீதி மய்யத்தின் துணைத் தலைவர் ஏ.ஜி.மவுரியா இ.கா.ப. (ஓய்வு), பொதுச் செயலாளர் ஆ.அருணாச்சலம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.4.2025) தலைமைச் செயலகத்தில், இந்திய தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பின் தலைவர் ஏ. முஹம்மது சித்தீக், துணைத் தலைவர் ஐ. முஹம்மது முனீர், பொதுச் செயலாளர் ஏ. முஹம்மது ஷிப்லி, துணை பொதுச் செயலாளர் தக்வா எம். மொய்தீன், பொருளாளர் ஏ.ஐ. பிர்தவ்ஸ் ஆகியோர் சந்தித்து, ஒன்றிய அரசின் வக்ஃபு சட்டத் திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.4.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், திருநங்கைகளின் நலனுக்காக ஆற்றிய சிறந்த சேவையைப் பாராட்டி 2025–ஆம் ஆண்டிற்கான "சிறந்த திருநங்கை" விருதினை தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை பொன்னி அவர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல ஆணையர் திருமதி ஆர், லில்லி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டின் உரிமைகள் என்று வரும்போது கட்சி வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து

# நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து - ஓரணியில் இருந்து செயலாற்ற வேண்டும்!

## சட்டப்பேரவையில் – 110 அறிக்கை மீதான விவாதத்திற்கு நன்றி தெரிவித்து – முதல்வர் வேண்டுகோள்!

**சென்னை, ஏப்.17-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.4.2025) சட்டமன்றப் பேரவையில், மாநிலங்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவும், ஒன்றிய-மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்திடவும் உயர்மட்ட குழுவினை அமைத்து, விதி எண் 110-ன் கீழ் வெளியிட்ட அறிவிப்புக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்ததற்கு நன்றி தெரிவித்து ஆற்றிய உரை வருமாறு :-**

பேரவைத் தலைவர் அவர்களே,

ஒன்றிய-மாநில உறவுகள் குறித்த ஓர் உயர்மட்டக் குழு அமைப்பது குறித்து, விதி 110-ன்கீழ் நான் சற்று முன் வெளியிட்டிருக்கக்கூடிய அறிவிப்பின்மீது பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் தங்களது கருத்துகளைத் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், அதனை வரவேற்றும், பாராட்டியும், வாழ்த்தியும் இருக்கிறார்கள். அவர்கள் கருத்துகளை எடுத்து வைத்திருக்கிற அதே நேரத்தில், சில அறிவுரைகளையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவற்றை ஏற்றுக் கொள்ள நான் தயாராக இருக்கிறேன்.

குறிப்பாக, காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வபெருந்தகை அவர்கள் பேசியபோது, 1974 ஆம் ஆண்டு, அன்றைக்கு முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் பேசிய உரையைப் புத்தகமாக அச்சிட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நல்ல யோசனை. ஏற்கெனவே தமிழ்நாடு சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புப் புத்தகமாக வெளியிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அவர் இந்த அவையிலே அதைக் கோரிக்கையாக வைத்திருக்கிற காரணத்தால், நிச்சயமாக, உறுதியாக புத்தகமாக அச்சிடப்பட்டு மீண்டும் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அதேநேரத்தில், பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.,-வினர் இங்கே இதில் கலந்துகொள்ளாமல், தங்கள் கருத்துகளைச் சொல்லாமல் சென்றுவிட்டார்களே என்ற வருத்தம், கவலை எனக்கு இருக்கிறது. காரணம் என்னவென்றால், அ.தி.மு.க.-வைத் தோற்றுவித்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோதும் சரி, அவரைத் தொடர்ந்து, அந்தக் கட்சியை வழிநடத்திய அம்மையார் செல்வி ஜெயலலிதா அவர்கள் இருந்தபோதிலும் சரி, என்னதான் தி.மு.க.-விற்கும், அ.தி.மு.க.-விற்கும் கருத்து மாறுபடுகளும், வேறுபாடுகள் இருந்தாலும், தமிழ்நாட்டின் உரிமைகளை விட்டுத்தர முடியாது என்ற நிலையில் இருந்து, மக்களுக்கான கோரிக்கைகளை அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

ஆனால், இன்றைக்கு என்ன சூழல் என்று புரியவில்லை. அது நமக்குப் புரியும். ஆனால், கொள்கை வேறு; கூட்டணி வேறு என்று அவர்கள் சொல்வார்கள். அதைத்தான் தற்போது சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள். "இதுதான் கொள்கையா?" என்கிற கேள்வியை தான் நாம் கேட்கவேண்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தமிழ்நாட்டின் நன்மையைக் கருதி, மக்களின் உரிமைகளைக் கருதி, நான் அவர்களிடம் வைக்கக்கூடிய கோரிக்கை, தமிழ்நாட்டின் உரிமைகள் என்று வரும்போது, நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, கட்சி வேறுபாடுகள் அனைத்தையும் கடந்து, ஓரணி யில் இருந்து செயலாற்ற வேண்டும். இதனை அவர்கள் ஏற்றுக் கொண்டு, அந்தப் பணியில் ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கையோடு, அனைவருக்கும் நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### தேசிய திருநங்கையர் நாள்

# சமூகத்தில் திருநங்கையரின் மாண்பை உறுதி செய்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

*சென்னை, ஏப். 17 –*

*தேசிய திருநங்கையர் நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:–*

***ஏப்ரல் 15: தேசிய திருநங்கையர் நாள்!***

***புறக்கணிப்புக்கும், ஏளனங்களுக்கும் ஆளான திருநர் உடன்பிறப்புகளின் சுயமரியாதையைக் காக்கும் பெயர் தந்து, நாட்டிலேயே முதன்முதலாக அவர்களுக்கென நலவாரியம் அமைத்தார் தாயுமான தலைவர் கலைஞர்!***

***கட்டணமில்லாப் பேருந்துப் பயணம், திருநர்களின் உயர்கல்விச் செலவை அரசே ஏற்கும், புதுமைப்பெண் திட்டம் திருநங்கையருக்கும் விரிவாக்கம், ஊர்க்காவல்படையில் திருநர்கள் என அதனை அடுத்தகட்டத்துக்குக் கொண்டு செல்கிறது நம் திராவிட மாடல் அரசு.***

***திருநர்களின் கல்வி, வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, சமூகத்தில் அவர்களின் மாண்பை உறுதிசெய்வோம்!***

*இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.*

### இந்து சமய அறநிலையத்துறை பதிப்பகப் பிரிவு மூலம்

# மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய 300 ஆன்மிக நூல்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, ஏப்.17-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.04.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் பதிப்பகப் பிரிவின் சார்பில் மூன்றாம் கட்டமாக புதுப் பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய 300 ஆன்மிக நூல்களை வெளியிட்டார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தொன்மை வாய்ந்த திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், திருக்கோயில் களுக்கு வருவாய் ஈட்டும் வகையில் புதிய திட்டங்களை செயல்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மேலும், சமய நெறிகளை பரப்பிடும் வகையில் அரிய ஆன்மிக நூல்களை மறுபதிப்பு செய்து புதுப்பொலிவுடன் நூலாக்கம் செய்திடும் பணிகளையும், அவை அனைவருக்கும் கிடைத்திடும் வகையில் திருக்கோயில் களில் புத்தக விற்பனை நிலையங்களையும் அமைத்து செயலாற்றி வருகிறது.

அந்த வகையில், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் பதிப்பகப் பிரிவு தொடங்கப்பட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் முதற்கட்டமாக தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருப்பாவை, திருவெம்பாவை, அபிராமி அந்தாதி, நாலாயிர திவ்யபிரபந்தம், தமிழகக் கலைகள், சைவமும் தமிழும், இந்தியக் கட்டடக் கலை வரலாறு, அவ்வையார் வரலாறு, பதினெண் புராணங்கள் உள்ளிட்ட அரிய 108 ஆன்மிக நூல்கள் 19.01.2023 அன்றும், இரண்டாம் கட்டமாக தலவரலாறு, தலப்புராணங்கள், நாட்டுடைமையாக்கப்பட்ட பக்தி இலக்கியங்கள் புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய 108 ஆன்மிக நூல்கள் 27.02.2024 அன்றும் வெளியிடப்பட்டன.

இந்நூல்கள் அனைவருக்கும் கிடைத்திடும் வகையில் ஆணையர் அலுவலகம் மற்றும் 203 திருக்கோயில்களில் புத்தக விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

2024-2025-ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற மானியக் கோரிக்கையில், "இந்து சமய அறநிலையத் துறை சார்பாக நடத்தப்படும் பதிப்பகப்பிரிவின் மூலம் சமயம் சார்ந்த தொன்மையான மற்றும் அரிய 300 ஆன்மிக நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்படும்"என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் பதிப்பகப் பிரிவின் மூலம் மூன்றாம் கட்டமாக, திருப்பேரூர் புராணம், பாவநாசத் தலபுராணம் போன்ற தலபுராண நூல்கள், சிவபுராணம், கந்தபுராணம் போன்ற புராணக்கதை நூல்கள், வழிபாட்டு பாடல்கள், மகாபாரதம், கம்பராமாயணம் போன்ற இதிகாச நூல்கள், காரைக்கால் அம்மையார். நம்மாழ்வார் போன்ற அடியார் புலவர் வரலாற்று நூல்கள், நுண்கலைகள், ஓவியச் செந்நூல் போன்ற கோயில் கலை வரலாற்று நூல்கள், சைவ, வைணவ இலக்கியங்கள், வேலும் வில்லும், வள்ளி மணம் போன்ற ஆன்மிக ஆய்வு நூல்கள், Temples gifted with Devaram, How soul becomes light போன்ற ஆங்கில நூல்கள் என புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய 300 ஆன்மிக நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வெளியிட்டார்.

எங்கும் கிடைக்கபெறாமல் இருந்த அரிய ஆன்மிக நூல்களை மறுபதிப்பு செய்து வெளியிடுவதன் மூலம் நமது பண்பாடு, கலாச்சாரம் மற்றும் கலை நுட்பங்களை அடுத்த தலைமுறையினர் அறிந்து கொள்ள வழிவகை செய்வதோடு, சமய நெறிகளை பாதுகாக்கும் காலப் பெட்டகமாகவும் இந்நூல்கள் திகழ்கின்றன.

இந்த அரசு பொறுப்பேற்ற பின், முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று சிறப்பித்த இந்து சமய அறநிலையத்துறையின் 100-வது நிகழ்ச்சியாக அரிய 300 ஆன்மிக நூல்கள் வெளியிட்ட நிகழ்ச்சி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்க தாகும்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் சி.பழனி, /திருமதி சி.ஹரிப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டக் கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செய்து "சமத்துவ நாள் உறுதிமொழி" எடுத்துக் கொண்டனர். உடன் ஆவின் ஆறுமுகம், கணேஷ் குமார் ஆதித்தன், ஜெ.செல்வ சூடாமணி, முத்தமிழ் ராஜா, நா.முருகன், வழக்கறிஞர் ஷேக் முஜிபூர் ரகுமான், கோபாலகிருஷ்ணன், அண்ணாதுரை ஆகியார் உள்ளனர்.